**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : சண்முகவேல்** | **Father/Husband's Name : ஆண்டி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.06.2026.**

**A1 to A4 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அழகாபுரி மேற்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆஜர் எதிரிகள் பாரதி, மருதை, சதீஸ், மணிகண்டன் ஆகியோர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே சென்றபோது அடையாளம் தெரியாத 10 – 15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தார்கள். நான் சண்டையை விலக்கிவிட சென்றபோது எனக்கு காது, கை, கால்களில் காயம் ஏற்பட்டது. யார் என்னை அடித்தார்கள் என எனக்கு தெரியவில்லை. பின்னர் நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் சந்தேகத்தின்பேரில் ஆஜர் எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி பாரதி கதவை தட்டி வெளியே வாடா என அழைத்ததாகவும், பின்னர் நான் எனது அப்பாவிற்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன்கோவில் அருகே

சென்றபோது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரிகள் என்னை கையாலும், கல்லாலும் தாக்கிவிட்டு கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள் எனவும், அதில் எனக்கு முதுகிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது எனவும், பின்னர் மேற்படி சண்டையை விலக்க எனது அம்மா மற்றும் எனது மனைவி வந்தபோது ஆஜர் எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.06.10 18:01:15 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : ஆண்டி** | **Father/Husband's Name : பாண்டியன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.06.2026.**

**A1 to A4 present**.

**<u>முதல் விசாரணை</u>**

**1. நான் தற்போது அழகாபுரி மேற்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் பாரதி, மருதை, சதீஸ், மணிகண்டன் ஆகியோர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது மகன். கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே அ.சா.1 சென்றபோது அடையாளம் தெரியாத 10 – 15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தார்கள் என கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி பாரதி கதவை தட்டி வெளியே வாடா என அழைத்ததாகவும், பின்னர் அ.சா.1 எனக்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன்கோவில் அருகே சென்றபோது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரிகள் அ.சா.1ஐ கையாலும், கல்லாலும் தாக்கிவிட்டு கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள் எனவும், அதில் அ.சா.1க்கு முதுகிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது எனவும், பின்னர் மேற்படி சண்டையை விலக்க எனது மனைவி மற்றும் அ.சா.1–ன் மனைவி வந்தபோது ஆஜர் எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்**

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : பேச்சியம்மாள்** | **Father/Husband's Name : சண்முகவேல்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.06.2026.**

**A1 to A4 present**.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது அழகாபுரி மேற்கு தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் பாரதி, மருதை, சதீஸ், மணிகண்டன் ஆகியோர்கள் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது மாமனார். பட்டியல் சாட்சி 3 காமாட்சி எனது மாமியார். தற்போது எனது மாமியார் உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாய் இருக்கிறார்கள். கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்து அழகுநாச்சியம்மன்கோவில் அருகே அ.சா.1 சென்றபோது அடையாளம் தெரியாத 10 – 15 நபர்கள் அங்கு சண்டையிட்டு கொண்டிருந்தார்கள் என கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 29.09.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு அ.சா.1 வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி பாரதி கதவை தட்டி வெளியே வாடா என அழைத்ததாகவும், பின்னர் அ.சா.1 எனக்கு சாப்பாடு கொடுப்பதற்காக அழகுநாச்சியம்மன்கோவில் அருகே சென்றபோது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரிகள் அ.சா.1ஐ கையாலும், கல்லாலும் தாக்கிவிட்டு கீழே தள்ளிவிட்டு அடித்தார்கள் எனவும், அதில் அ.சா.1க்கு முதுகிலும், உடம்பிலும் காயம் ஏற்பட்டது எனவும், பின்னர் மேற்படி சண்டையை விலக்க எனது மாமியார் மற்றும் நான் சென்றபோது ஆஜர் எதிரிகள் அ.சா.1க்கு கொலை மிரட்டல்

விடுத்துவிட்டு தப்பியோடிவிட்டார்கள் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 145 of 2022**

**Deposition of Witness P.W.4**

| | |
|---|---|
| **Name : அஜித்குமார்** | **Father/Husband's Name : மலையாளம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 10.06.2026.**

**A1 to A4 present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30.09.2021ம் தேதி மதியம் 3.00 மணிக்கு நானும், தண்டபாணி என்பவரும் அழகாபுரி அழகுநாச்சியம்மன்கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், தண்டபாணி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நீதித்துறை நடுவர்,
பழனி.